**கவனிக்க .**- *26.04.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1809 - 2013 මැයි මස 03 වැනි වැනි සිකුරාදා - 2013.05.03

*1809 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | 1122 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1122 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |


**கவனிக்க.**- (i) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) நிதி சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) பிறப்புகள் இறப்புகள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

**மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்**

*மத்திய மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ ஆகிய நான் 13 ஆவது அரசியல் சாசனத்தின் திருத்தப்பட்ட இலங்கைச் சானநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தில் 154 (ஆ) சரத்தின் 8 (அ) பந்தியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மாகாண சபையில் இது வரை பழைய சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற மாகாண சபையின் கூட்டம் அதிமேதகு சனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மத்திய மாகாண சபையின் புதிய மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கூட்ட மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ள வேண்டும்.*

*இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் 154 (ஆ) சரத்தின் 10 (அ) பந்தியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி குறிப்பிட்ட மாகாண சபை கூட்டம் இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பள்ளேகலை மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் புதிய மாகாண சபை கூட்ட மண்டபத்தில் என்னால் அழைக்கப்படுகிறது என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளவும்.*

*டிகிரி கொப்பேகடுவ,*
*மத்திய மாகாண ஆளுநர்.*

*கண்டி,*
*2013, மாச்சு 15.*

*5-39*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

*வடமத்திய மாகாண மாகாண சபையின் மாகாண அரச முகாமைத்துவ சேவையின் வகுப்பு III இன் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக வடமத்திய மாகாணத்தில் தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2013, யூன் மாதம் 03 ஆந் திகதி ஆகும்.*

*2. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக திறமை அடிப்படையில் தகைமைகளை பெறும் விண்ணப்பதாரிகள் அரச நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 15/90 இற்கு ஏற்ப வடமத்திய மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களினதும், சனத்தொகை விகிதத்திற்கேற்ப தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்ட பின் நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*3. நியமனம் பெறுபவர்களின் எண்ணிக்கை, மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுக்குரியதாகும்.*

*4. **சம்பளம்**.- இலக்கம் 06/2006 (iv) மற்றும் 2007.08.24 ஆந் திகதியிடப்பட்ட, அரச நிருவாகச் சுற்றுநிரூபத்திற்கேற்ப முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III, II, I என்பவற்றிற்கான மாதாந்த சம்பளம் ரூபா 13,990-10 × 145 - 11 × 170 - 6 × 240 - 14 × 320 - ரூபா 23,230 ஆகும். ரூபா 15,440 ஐத் தாண்டிச் செல்வதற்கு வகுப்பு II இற்கு பதவி உயர்வு பெற வேண்டியதுடன் ரூபா 17,310 ஐத் தாண்டிச் செல்வதற்கு வகுப்பு I இற்கு பதவி உயர்வு பெற வேண்டும்.*

*5. (i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது. அரச நிருவாகச் சுற்றறிக்கை 06/2006 இற்கேற்ப, விதவைகள்/தபுதாரிகள், அனாதைகள் ஓய்வூதியாக நிதியத்திற்குரிய கட்டணம் செலுத்த வேண்டும்.*

*(ii) 2007.05.28 ஆந் திகதியும் 07/2007 ஆம் இலக்கமும் கொண்ட, அரச நிருவாகச் சுற்று நிரூபத்திற்கேற்ப சேவையில் சேர்த்து 05 வருட காலத்தினுள் சேவைக்குச் சேர்ந்த ஊடக மொழிக்கு மேலதிகமாக இன்னொரு மொழி/மொழிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.*

*(iii) நியமனம் பெறுபவர்கள் வடமத்திய மாகாணத்தில் எந்தவொரு சேவை நிலையத்திலும் 3 வருட காலங்கள் சேவையாற்றுவதற்கு உட்பட வேண்டும். அக்காலத்தினுள் அப்பதவியிலிருந்து விடுவிக்கக் கோரும் எந்தவொரு வேண்டுகோளும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.*

*6.* **தகைமைகள்**.- வடமத்திய மாகாண அரச முகாமைத்துவ சேவையின் வகுப்பு III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, கீழ்வரும் தகைமைகள் தேவையாகும்.

(அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு (2013, யூன் மாதம் 3 ஆந் திகதிக்கு) 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.)

(இ) சிறந்த ஒழுக்குமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வரும் கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்:-

(i) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் க. பொ. த. (சா/தர) ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) க. பொ. த. (உ/த) ப் பரீட்சையில் சாதாரணப் பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.)

**7. மாவட்ட சனத்தொகை விகிதத்திற்கேற்ப தேர்ந்தெடுத்தல் :**

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| அனுராதபுரம் | 1 |
| பொலன்னறுவை | 2 |

(i) மேற்கூறப்பட்ட நிர்வாக மாவட்டங்கள் இரண்டினதும் சனத்தொகை வகிதத்திற்கேற்ப, அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 15/90 இற்கு ஏற்ப, அவ்வவ் நிருவாக மாவட்டங்களுக்கு வெற்றிடங்களின் குறிப்பிட்ட அளவுகள் ஒதுக்கப்படும். மாவட்ட சனத்தொகை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைகளுக்கு உள்வாங்கப்படாவிட்டால் மாகாணத்தினுள் அவ்வெற்றிடங்கள் மற்றைய மாவட்டத்துக்கு வழங்கப்படும்.

(ii) பரீட்சையில் சித்தியடைவதற்கு தேவையான மிகக்குறைந்த புள்ளிகள் பெற்றவர்களின் எண்ணிக்கை காணப்படும் வெற்றிட எண்ணிக்கைகளை விடக் குறைவாயின் மாவட்ட சனத்தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படமாட்டாது.

(அ) நிரந்தர வதிவிற்கான தகைமைகள் :

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு, வடமத்திய மாகாணத்தில் (அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில்) கிட்டிய 05 வருட காலத்தினுள் அண்மைய 03 வருட காலங்கள் நிரந்தர வதிவை உறுதிப்படுத்த வேண்டியதுடன் வதிவை உறுதிப்படுத்துவதற்காக, நேர்முகப்பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii) பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ். (அச்சான்றிதழில் 2 (அ) மற்றும் 2 ii பகுதிகளில், தேர்தல் இடாப்பின் மூலம் வதிவை உறுதிப்படுத்தி கொள்வதற்கு தேவையான தகவல்களான வாக்காளர் இடாப்பின் இலக்கம், மற்றும் பதிவு தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.)

*8.* **பரீட்சை முறை**.- ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் இப்போட்டி பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும். பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பித்த ஊடக மொழி பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

| வினாப்பத்திரம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) மொழி ஆற்றல் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (ii) விவேகப்பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 |

(i) மொழியாற்றல்.- இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் கருத்து வெளிப்பாடு, விளக்கம், எழுத்தறிவு, மற்றும் எளிய இலக்கணப்பயன்பாடு போன்றவை தொடர்பான அறிவை மதிப்பிடுவதற்காக தயாரிக்கப்பட்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) விவேகப் பரீட்சை.- இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் எண்ணறிவு, தர்க்கிக்கும் திறன், நுண்ணறிவு ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டது. 50 வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

9. நியமனம் பெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் 40% புள்ளிகளையாவது பெறுவதுடன் மொத்தப்புள்ளிகளாக குறைந்தது 50% ஆவது பெறவேண்டும். போட்டிப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள

வெற்றிடங்களின் எண்ணிக்கை, மற்றும் விகிதம் என்பவை பூரணமாகுமாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையானது கட்டாயமாக பின்பற்றப்படுவதுடன் மேலே பந்தி 06 இல் கூறப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

10. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையின் போது தகைமை பெறுகின்ற அங்கவீனர்களுள் உயர் புள்ளி மட்டத்திலுள்ள 3% வீதம் மட்டுமே நியமனம் பெற்றுக்கொடுப்பதற்காக மேலே பந்தி 09 இற்கு ஏற்ப தகைமை பெறுவர். அவ்வாறு தகைமைகளைப் பெறுபவர்கள் விஷேட வைத்தியர் குழுவொன்றினால் பரீட்சிக்கப்படுவர். விஷேட வைத்திய அறிக்கையின் படி தமது அங்கவீனத்தன்மை மற்றும் அது உரிய பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கு தடங்களாக அமையாது என்பதை உறுதிப்படுத்திய பின் தேர்ந்தெடுக்கப்படுவர்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.**- தமது தகைமைகள் தொடர்பான உண்மையான தகவல்களை வழங்குவது விண்ணப்பதாரிகளின் பொறுப்பாகும். உமது விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தும் போது மிக அவதானத்துடன் விண்ணப்பதாரி சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஒரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன், பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்பு அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத் தகைமையை இரத்துச் செய்யலாம். விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பொய்யானவை எனத் தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம். பரீட்சை நடாத்துவது தொடர்பாக, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிவர். அச்சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர்கள் உட்பட வேண்டும்.

12. **பரீட்சைக்கட்டணம்.**- சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக் கட்டணத்தை வடமத்திய மாகாண சபைக்கு செலுத்த வேண்டும். பரீட்சைக்கட்டணம் ரூபா 600 ஆகும். அப்பரீட்சைக்கட்டணத்தை வடமத்திய மாகாண மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்தில், திணைக்களத்தில் (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி, வழங்கப்படும் என் சீ 100 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்பரீட்சைக் கட்டணம் வடமத்திய மாகாணத்தின் பொது வைப்புக்கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மீண்டும் செலுத்தப்படமாட்டாது. (பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் தம்மிடம் வைத்திருக்க வேண்டும்.)

13. **விண்ணப்பப்படிவம்.**- இவ்விண்ணப்பத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 (21×29 செ. மீ.) (சாதாரண ஹாப்சீட்) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி

(அ) 01 தொடக்கம் 3.4 வரையான பகுதிகள் முன்பக்கத்திலும்

(ஆ) 04 தொடக்கம் இரண்டாவது மூன்றாவது பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டியதுடன் சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) அங்கவீனர்களின் விண்ணப்பப்படிவத்தின் மேற்பகுதியில் அங்கவீனர் விண்ணப்பப்படிவம் எனவும், எவ்வகையான அங்கக்குறைபாடு எனவும் சிவப்பு நிறத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அங்கவீனர் தன்மையை உறுதிப்படுத்தும் வைத்தியச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஈ) மேலே பந்தி 06 இற்கு ஏற்ப, தகைமைகள் பெறப்பட்டுள்ளது என்பதை நிரூபிப்பதற்குரிய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

இவ்வறிவித்தலுக்கு ஏற்ப உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப அமையாத உரிய திகதிக்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத வேறு நிறுவனங்களுக்கு பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட கல்விச்சான்றிதழ்களின் படி தகைமை பெறாத முழுமையாகப் பூரணப்படுத்தாத தெளிவற்ற முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாகப் பூரணப்படுத்தப்படாமை காரணமாக ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ள வேண்டும். பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

13.1 **பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நகரமும், நகர எண்ணும்** :

| நகரம் | நகர எண் |
|---|---|
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |

13.2 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி, உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன் விண்ணப்பித்த சகல

விண்ணப்பதாரிகளுக்கும், போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை கிடைப்பது அவர் இப்பதவிக்குரிய தகைமைகளைப் பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரி தகைமையற்றவர் எனத் தெரியவரின் அவரது விண்ணப்பத்தகைமை இரத்துச்செய்யப்படும். எனினும் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டவரின் நியமனம்பெற்ற பின், தகைமையற்றவர் எனத் தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

13.3 முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் (போட்டோ பிரதியுடன்) 2013, யூன் மாதம் 3 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் "செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமத்திய மாகாணம், அநுராதபுரம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013" எனவும் உமக்குரிய மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும். தபாலில் காணாமல் போதல், அல்லது தமாதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது.

13.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரி, சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், ரூபா 240,360/- அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டு பதவி முத்திரையும் இடப்படல் வேண்டும். அரச உத்தியோகத்தர்/மாகாண அரச உத்தியோகத்தர் ஒருவர் தமது திணைக்கள தலைவரின் ஊடாக தமது விண்ணப்பங்களை முன்வைக்க வேண்டும்.

14. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, பரீட்சை நடைபெறும் தினத்திற்கு, ஒரு கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறான, அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள், பரீட்சை மேற்பார்வையாளரிடம், தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை, முன்வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இது தொடர்பாக கீழ்வரும் தகவல்களுடன் பரீட்சை ஆணையாளரிடம் விசாரிக்கலாம்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் இது தொடர்பான பத்திரிகை விளம்பரமொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்பும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பதிவுத்தபால் அனுப்பிய பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியேயாயின் அனுமதியட்டையைப் பெறுவதற்கான பெக்ஸ் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்ட வேண்டுகோள் கடிதம் என்பவற்றை தம்மிடம் வைத்துக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

15. விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை விண்ணப்பதாரிகள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைக்க வேண்டும்:-

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

16. பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளரினால் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும், அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட, திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

17. பரீட்சையை நடாத்துதல், நியமனம் வழங்குதல், மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும். இவ்வறிவித்தலின் ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புகளுக்கிடையிலான வேற்றுமைகளின் போது சிங்கள மொழி அறிவித்தலே வலுவுடையதாகும்.

எஸ். எம். எஸ். தென்னகோன்,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணையாளர்.

மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
வடமத்திய மாகாணம்,
அநுராதபுரம்,
2013, ஏப்பிறல் 10.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open Competitive Examination for Recruitment to North Central Province Management Assistants Service Class III - 2013

*(தரப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீடுகளை/இலக்கங்களை/தெளிவான எழுத்தில் குறிப்பிடுக.)*

| வடமத்திய மாகாணம் | 07 |
|---|---|

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(சரியான இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

(ஊடகமொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர எண் |
|---|---|
| | |

பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரமும் நகர எண்ணும் :-
(அநுராதபுரம் - 19, பொலன்னறுவை - 20)
(பரீட்சை நிலையம் அமையும் நகரமும், நகர எண்ணும் தொடர்பாக பரீட்சை அறிவித்தலில் 12.1 எனும் பந்தியை பார்க்க)

1.0 வெற்றிடங்களுக்கமைய போட்டியிடுவதற்கு பரீட்சை அறிவித்தலில் 7.0 எனும் பந்திக்கு அமைவாக நீங்கள் தெரிவு செய்யும் மாவட்டத்தையும், மாவட்ட இலக்கத்தையும் உரிய கூட்டினுள் இடுக.

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவது பரீட்சை அறிவித்தலுக்கமைய அங்கவீனர் புனருத்தாபன கட்டளைக்கு அமைவாகவா?
ஆம் - 1
இல்லை - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

(இப்பகுதியை பூரணப்படுத்துவதற்கு முன்னர் அறிவித்தலில் 10 ஆவது பந்தியை நன்கு வாசித்து பூரணப்படுத்துக.) (சரியான இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

1.1 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்) உதாரணம் :- NIMAL M. A. S.
1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்)
1.3 முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்)
2.2 நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில்/தமிழில்)
2.3 பரீட்சை அனுமதியட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :-----.
(ஆங்கில கெபிடல் எழுத்துக்களில்)

3.0 3.1 ஆண்/பெண் :-----.
ஆண் - 1, பெண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

3.2 பிறந்த திகதி
ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.3 விண்ணப்பிக்கும் இறுதி தினத்திற்கு (2013 யூன் 03) வயது :-----.

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

3.4 தொலைபேசி இலக்கம் :- | | | | | | | | | | |

4.0 4.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

4.2 பிரதேச செயலகப் பிரிவு :-----.

4.3 வடமத்திய மாகாணத்தினுள் உங்கள் நிரந்தர வதிவிட மாவட்டமும் : வதியும் காலமும் :-----.

4.4 கிராம சேவகர் பிரிவு :-----.

5.0 கல்வித் தகைமைகள் :- (விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு முன்பு தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.)

5.1 க. பொ. த. (சா/தர) ப் பரீட்சை தொடர்பான விபரங்கள் :-----.

(i) பரீட்சை நடைபெற்ற வருடம், மாதம் :-----.

(ii) பரீட்சை சுட்டெண் :-----.

(iii) பெறுபேறு :-----.

| பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க. பொ. த. (உ/தர) ப் பரீட்சை தொடர்பான விபரங்கள் (விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினத்திற்கு முன்பு தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்) :-----.

(i) பரீட்சை நடைப்பெற்ற வருடம், மாதம் :-----.

(ii) பரீட்சை சுட்டெண் :-----.

(iii) பெறுபேறு :-----.

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6.0 வேறு தகைமைகள் இருப்பின் :-----.

7.0 நீங்கள் எப்போதாவது அல்லது ஏதாவது குற்றச்சாட்டுகளுக்கு அல்லது குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருந்துள்ளீரா? (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

ஆம் ☐ இல்லை ☐

8.0 பரீட்சைக் கட்டணம் செலத்தப்பட்டது தொடர்பான விபரங்கள் :-

(1) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.

(2) பற்றுச்சீட்டு இலக்கம், திகதி :-----.

(3) செலுத்திய கட்டணம் :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராமல் இந்த கூட்டினுள் ஒட்டுக.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) |

9.0 இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது நம்பிக்கைக்கு ஏற்றவாறு உண்மையானவை என்றும், சரியானவை என்றும் கௌரவத்துடன் தெரிவிக்கின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைவாக தகுதியற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்பு அல்லது பின்பு என்னுடைய பரீட்சை விண்ணப்ப தகுதியை இரத்து செய்யும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள நான் இணங்குகிறேன். மேலும் பரீட்சை நடைபெறுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

*10.0* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**
இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் ................................ திரு./திருமதி/செல்வி அவர்களை தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் .......................... ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளாயின் கீழ்வரும் சான்றிதழை திணைக்கள தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்)

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் ........................ அலுவலகத்தில்/திணைக்களத்தில் .................. ஆந் திகதியிலிருந்து ........................... பதவியில் கடமையாற்றுகின்றார் எனவும் அவரின் சேவை திருப்திகரமானது எனவும் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது பதவி வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-38

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 03.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2013 |
| | | வெள்ளி | 10.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2013 |
| | | வெள்ளி | 17.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2013 |
| | | வியாழன் | 23.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2013 |
| | | வெள்ளி | 31.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2013 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2013 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.06.2013 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.